120—

சமுதாயக் கூடம்

***9911—திரு. க. கார்த்திகேயன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், லா. கூடலூர் ஊராட்சியில் உள்ள ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதிக்கத் துடிக்கும் பெண்களுக்கு சான்றாய் அமைந்த மந்திரச் சொல்லாகிய மாண்புமிகு அம்மா அவர்களின் திருவடியை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், தங்களையும் பணிந்து வணங்குகிறேன்.*

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், லா. கூடலூர் ஊராட்சியில் வசிக்கும் ஆதி திராவிடர் மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்டுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். இது தொடர்பாக, ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கை, போதுமான இடம் மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையில் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிஷிவந்தியம் தொகுதி முழுவதும் கிராமங்கள் நிறைந்த பகுதி. இப்பகுதியில் உள்ள லா. கூடலூர் பஞ்சாயத்து 8 ஆயிரம் பேருக்குமேல் இருக்கின்ற ஒரு கிராமம். அந்தப் பகுதி மேலத்தேனூர், கீழத்தேனூர் போன்ற பகுதிகளை உள்ளடக்கியது. மேலும் போக்குவரத்து வசதி மிகக் குறைந்த பகுதி. அந்தப்*

2019 ஜூலை 16]

பகுதிக்கு சமுதாயக் கூடம் அமைத்துத் தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியளித்திருக்கின்றார். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அதேசமயம், எங்கள் பகுதியிலே 8 ஆயிரம் மக்கள் வசிக்கின்ற பகண்டை கூட்டுச்சாலை, கீழ்பாடி, சாத்தப்புத்தூர், ஈருடையாம்பட்டு ஆகிய பகுதிகளில் போக்குவரத்து வசதி கிடையாது. அங்கிருந்து மக்கள் நகர்ப்புறத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், கள்ளக்குறிச்சி, தியாகதுருகம் அல்லது திருக்கோவிலூருக்குச் செல்ல வேண்டும். இந்தப் பகுதியிலும் சமுதாயக் கூடம் அமைத்துத் தந்தால், நன்றாக இருக்குமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களின் மேலான பார்வைக்குக் கொண்டு சென்று, நிறைவேற்ற வாய்ப்பு இருப்பின், பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.

திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ரிஷிவந்தியம் தொகுதி, மணலூர்பேட்டை பேரூராட்சியிலும், ரிஷிவந்தியம் ஊராட்சியிலும், அதேபோல் மூங்கில்தரப்பட்டு போன்ற பகுதிகளிலும் ஆதி திராவிடர் மாணவ, மாணவியர் விடுதிகள் இருக்கின்றன. அந்த விடுதிகளில் போதுமான அளவு இட வசதியில்லாமல் மாணவர்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். அந்தப் பகுதியில் புதிய மாணவர்கள் விடுதி ஒன்றை அமைத்துக் கொடுத்தால், மாணவர்களுக்கு வசதியாக இருக்கும் என்பதால், அதை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று கனிவோடு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. தகவல் கோரல்

(அ) தமிழகத்தில் ஹைட்ரோகார்பன் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்படாது என்ற கொள்கை முடிவினை எடுத்து இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிவித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நாடாளுமன்றத்திலே* Hydrocarbon *திட்டத்தைப் பற்றி ஒரு வினா எழுப்பப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி உள்ளிட்ட தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கேள்வியை நாடாளுமன்றத்தில் எழுப்பியிருக்கின்றார்கள். அதற்கு மாண்புமிகு மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு மற்றும் உருக்குத் துறை அமைச்சர்* Thiru Dharmendra Pradhan *அவர்கள் ஒரு பதிலைச் சொல்லியிருக்கிறார். தமிழகத்தில்* Methane *திட்டம் எதுவும் செயல்படுத்தப்படவில்லை. 7* Hydrocarbon *திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் இரு* Hydrocarbon *திட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களோடு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாட்டிற்கு*